வளன் ஆயம்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# இராஜம்கிருஷ்ணன் புதினங்களில் மனித மாண்புகள்

**முனைவர் பா. லதா,** உதவிப்பேராசிரியர், இலயோலா கல்லூரி, மெட்டாலா, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

**மின்னஞ்சல் முகவரி** - blathabalaji73@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதம் மட்டுமே மதிப்புக்களால் ஆனது. மதிப்பதும் மதிப்புக்குட்படுவதும் மனிதத்தின் மாண்புகள். மக்களை மாக்கள் ஆகாமல் தடுப்பதும் இதுதான். மனதால் இயங்குபவன் மனிதன். மனது பயன்பட வேண்டுமானால் முதலில் அது பண்பட வேண்டும். மனிதனை பண்படுத்துபவையாக கலை, இலக்கியம், கலாச்சாரம் போன்றவை உள்ளது. இலக்கியம் மனிதனைப் பக்குவப்படுத்துகிறது பட்டை தீட்டுகிறது – பரிமாணப்படுத்துகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நீள் கதை நாவலானது. நாவலும் சரித்திரங்களில் தொடங்கி சமூகத்தின் சகல சதுர வட்டங்களிலும் சஞ்சாரம் செய்தது. விளக்கமும், விமர்சனமும் சமூக நாவல்களுக்குச் சாகாச் சிறகுகள் ஆயின. இராஜம் கிருஷ்ணன் ஒரு குறிஞ்சித்தேன். நாவல் இலக்கியத்தின் வேருக்கு நீர் வார்த்தவர்களுள் ஒருவர் இவரது சத்திய வேள்வியில் மனித மாண்புகள் நாவல்களின் சாரமும் சத்துமாகும். பெண்ணியம் ஆணியம் என்று பேதப்படுத்தாமல் மனிதம் பேசினார். அதில் மனித மாண்புகளை வெளிப்படுத்துவதே இவ்வாய்வு கட்டுரையின் சாரமாகும்.

**கலைச் சொற்கள்:**

பிரச்சனை - ஒழுங்கற்ற முறை, சிக்கல்.
தீர்வு - முடிவு, விடை.
போராட்டம் - எதிர்கொள்ளுதல்.
பண்பாடு - பழைமை பண்பு, திருந்திய ஒழுக்கம்
குடும்பம் - கூட்டம்.
வாழ்வு - நடைமுறை வாழ்க்கை.
மாண்புகள் - மதிப்புகள்.

சமூகம் - மக்கள் கூட்டமைப்பு.

அகிம்சை - இரக்க உணர்வு.

சத்தியாகிரகம் - உண்மையிலிருந்து பிறந்த சக்தி.

சாதி - குலம், பிறப்பு.

காணிக்கை - அடியுறை.

**முன்னுரை:**

ஓர் இலக்கிய வடிவம் புதிதாகத் தோன்றுகிறதென்றால் அதற்கு ஓர் இன்றியமையாத காரணம் இருக்கிறது என்பது பொருள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சி இந்தியாவில் வேரூன்றித் தழைக்கத் தொடங்கிய நிலையில் இந்திய சமுதாயம் வரலாறு காணாத அளவுக்கு மாபெரும் மாறுதல்களுக்கு உட்பட்டது.

சமுதாய நெறிமுறைகளிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் தனிமனிதன் பிறழ்கின்ற பொழுது புது இலக்கியம் பிறக்கிறது. இவ்வகையில் மனித உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள் யாவற்றையும் முழுமையாகச் சித்தரிக்கும் ஆற்றல் வாய்ந்த கலை வடிவமாக புதினம் பவனி வந்தது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வடிவங்களில் புதினம் தனி இடம் வகிக்கிறது. புதினம் தனிமனித வாழ்வை மட்டுமல்லாமல் ஒரு மனிதன் வாழும் காலத்துச் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளையும் படம் பிடித்துக் காட்டுவதோடு அந்த வாழ்வு மீது விமர்சனத்தையும் வைக்கிறது. எனவே புதினம் அது தோன்றிய காலச் சமுதாயத்தின் பிரதி பலிப்பாக அமைகிறது எனலாம். தமிழில் சமூக நாவல் ஆசிரியர்களில் பெண்பால் ஆசிரியர்களில் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். இவர்களில் சிறந்தவராகத் திகழ்பவர் இராஜன் கிருஷ்ணன். இவரது கதையுலகம் எளிமையும் அன்பும் நிரம்பியது. அன்றாட வாழ்வு தரும் நெருக்கடியைத் தாங்காமல் மனிதன் நெகிழ்வுறும் கனங்களைப் பதிவு செய்துள்ளது.

‘‘**நாவல் என்பது நான்கு சுவர்களுக்குள் அமர்ந்து கற்பனை செய்யும் படைப்பு அல்ல. வாழ்க்கை அனுபவத்தில் இருந்து நாவலாசிரியன் பெறக்கூடிய படிப்பினைகளின் விளைவாகும்.**’’[1] என்று இராஜம் கிருஷ்ணன் கூறுகிறார்.

இராஜம் கிருஷ்ணன் மனித நேயம் மிக்கவர். மனித மாண்புகளில் ஈடுபாடு கொண்டவர். இவர் புதினங்களில் மிளிரும் பல்வேறு மனித மாண்புகளைப் பட்டியலிட்டு கூறலாம். அவற்றுள்

1. அன்பு

2. கல்வி
3. பண்பாடு
4. தியாகம்
5. நாட்டுப்பற்று
6. அகிம்சை போன்ற மனிதமாண்புகள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**அன்பு:**

ஒருவர் மற்றொருவர் மகிழ்விலும், நலத்திலும், மேம்பாட்டிலும் அக்கறை கொள்வதும், அதனைச் செயற்படுத்துவதும் அன்பாகும். தன்னலமல்லாப் பெருவாழ்வு பெறத் துணையாக இருப்பது அன்பாகும். அன்பின் சிறப்பினை,

**“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**

**அன்பே சிவமாவ தாரும் அறிவிலார்**

**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**

**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே”**[2] எனத் திருமந்திரம் விளக்குகிறது.

அன்பு ஓர் ஆக்க சக்தி. உயிர்களை நேயத்துடன் இணைக்கும் மூலமந்திரம். அன்பு இருக்கும் இடத்தில் அமைதி இருக்கும். அமைதி இருக்கும் இடத்தில் இன்பம் இருக்கும்.

இராஜம் கிருஷ்ணனின் மலர்கள் என்ற நாவலில் சித்ரா என்ற கதைமாந்தர் வழி அன்பின் விளக்கத்தினை அறியலாம்.

“**அன்பு எந்த வழியாக வந்தால் தானென்ன? அந்த ஆறுதலும், சந்தோ‘மும் தனியான இன்பம் தருவதுதான். இது சித்தியின் அன்பான கடிதம் கண்ட சித்ராவின் சிந்தனை”**[3] என்பதும்

**“இளமையில் அன்புக்கு ஏங்கிய உள்ளம் அதைப் பெறாதபோது ஊனமாகப் போகிறது”**[4] என்பதும் அன்பிற்கு ஏங்கும் சித்ராவின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.

அடுத்து, **சேற்றில் மனிதர்கள்** என்ற நாவலில்

**“உன்னுடைய ஊர்கெட்டு, சாதிக்கெட்டு, கொள்கைக்கெட்டு எல்லாம் மூட்டைக்கட்டி வைத்துவிட்டு, மனிதாபிமானக்கண்ணோடு பாரு, புதை மண்ணில்**

**கால் வைத்தவள் தெரிந்து தப்பி வந்திருக்கிறாள். இன்றைய நிலையில் பெண்ணினம் எவ்வளவு பாதுகாப்பில்லாமல் இருக்கிறது என்பதற்கு அவள் அனுபவமே போதும். இந்த நிலையை மாற்றப் பெரிய அளவிலே ஏதேனும் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. அவளை அடிக்காதே, புண்படுத்தாதே".**[5]

என சண்முகத்தின் மகள் தவறு செய்யும் போது சண்முகத்தின் நண்பர் அறிவுறுத்துவதின் வாயிலாக ஆசிரியர் அன்பை வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு இவரது புதினங்களில் அன்பு என்னும் மனித மாண்பு பல்வேறு சூழ்நிலைகளில் வெளிப்படுவதை அறியலாம்.

இவரது **'மலர்கள்'** என்ற நாவலில் சித்ரா என்ற கதை மாந்தர் வழியிலும், **'சேற்றில் மனிதர்கள'** என்ற நாவலில் இடம்பெறும் கதை மாந்தராகிய சண்முகத்தின் நண்பர் அறிவுறுத்துவதின் வாயிலாகவும் அன்பின் சிறப்பு வெளிப்படுகிறது.

**கல்வி:**

சமூகத்தின் தேடலில் மனிதன் கண்ட முதல் வெற்றி மொழியாகும். இதன் வளர்ச்சியில் உதயமானது கல்வியாகும். இது தனிமனித மற்றும் சமூக வாழ்வியல் தேடலுக்குப் பெரிதும் துணை செய்வதாய் அமைகிறது. இராஜம் கிருஷ்ணன் கல்வியின் இன்றியமையாமையை **'மலர்கள்'** என்னும் புதினத்தில் தெளிவாக விளக்குகிறார். **'அலைவாய்க் கரையில்'** என்ற புதினத்தில் கல்வியறிவற்றவனின் ஏக்கத்தைப் புலப்படுத்துகிறார். **'வேருக்கு நீர்'**, **'சேற்றில் மனிதர்கள்'** நாவல்களிலும் கல்வியின் தேவையை வெளிப்படுத்துகிறார்.

அலைவாய்க் கரையில் என்னும் நாவலில் கோவிலுக்கு விலை உயர்ந்த ஷதுவிஷ காணிக்கையாகக் கொடுப்பதில் மறுபரிசீலனை செய்ய வேண்டிய பாதிரியாரிடம் பெஞ்சமின் நசரேன் விவாதிக்கின்றனர்.

**"அவர்கள் பேசுவதைக் கேட்கையில், வாழ்க்கையில் முன்னேற்றம் காணப் படிப்பும், வெளி உலக அனுபவமும் எவ்வளவுக்குத் தேவை என்று மரியானுக்கு உறைக்கிறது. தங்களுக்கு எதிர்காலம் என்னவாயிருக்குமோ என்ற நிலையில் பெருமூச்செறிகிறான்."**[6]

இவ்வரிகளில் கல்வியற்றவனுக்கு இருக்கிற ஏக்கமும், தடுமாற்றமும் துல்லியமாகக் காட்டப்படுகிறது.

அடுத்து, கல்வி என்பது மனசைப் பண்படுத்த வேண்டும். அந்த வகையில் **“இந்நாட்டில் ஏட்டுக் கல்விமுறை பயனளிக்கவில்லை என்று அவர் கண்டாரே ஒழிய, மேலை நாட்டுக் கல்வியை அவர் வெறுக்கவில்லை. செயல்திறனும், கூரிய மதியும், நாட்டு மக்களை கவரும் சொல்வன்மையும் கூடிய ஒருவரை அவர் தமக்குப் பின் வாரிசாக்கியதில் தவறில்லையே”**[7] என்று வேருக்கு நீர் என்னும் நாவல்வழி கல்வியைப் பற்றி ஆசிரியரது சிந்தனை புலனாகின்றது.

அதேபோல் சேற்றில் மனிதர்கள் என்னும் நாவலிலும் பையன் படிக்கிறான், பெண் படிக்கிறாள் என்று அந்தக் குடிக்கே எவ்வளவு பெருமையாய் இருந்தது என்று கல்வியினால் வரும் சிறப்பை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**பண்பாடு:**

ஒரு சமூகத்தின் அடிநாதமாக, ஆணிவேராக விளங்குவது அதன் பண்பாடு எனலாம். பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் அஃது எல்லாப் பொருள்களையும் தமக்கும், பிறருக்கும் பயன்படுத்தும் உள்ளத்தின் செம்மைப் பண்பாகும். பண்பாடு குறித்து இவரது **‘சேற்றின் மனிதர்கள’** என்னும் நாவல் விளக்கமளிக்கிறது. இந்நாவலில் காந்தி என்னும் கதைமாந்தர், **“என்ன அக்கிரமம் அப்பா, பெண்ணுகளக் கடத்திட்டுப் போயி, அரபு நாடுகளுக்கு விக்கற வேலயே நடக்குதாம் இதுதானா நம்ம பெருமையா சொல்லிட்டிருக்கிற பாரத நாட்டுப் பண்பு கலாசாரம நெனச்சா வயிறெறியிது”**[8] என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு நம்நாட்டின் பண்பாடு சீரழியும்போது அதைக் கண்டு வேதனைப்படும் பாத்திரத்தை உருவாக்கி இந்தியாவின் பண்பாட்டை நிலை நிறுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் **‘உத்திரகாண்டம’** என்னும் நாவலிலும், “**சரிம்மா உள்ளே வாங்க, கஞ்சியும் சோறுமா ஏதோ ஆக்கி வைச்சிருக்கிறேன் என்று அவர்களைச் சமையல் அறைக்குள் அழைத்துச் செல்கிறாள்.”**[9] தமிழருடைய பண்பாடே விருந்தினரை உபசரிப்பது தான். அந்த பண்பாட்டை மேற்கண்ட நாவலில் அறிய முடிகிறது.

மேலும், கோபுர பொம்மைகள் என்னும் நாவலில் இடம்பெறும் அபிராமி தனக்கு சமைத்து வைத்து சாப்பாட்டை விருந்தினர்கள் வந்திடவே அவர்களோடு சேர்ந்து சாப்பிடுவது அவள் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது.

**“ஓ-ஆன்ட்டி? இருப்பதை எல்லோரும் சாப்பிடுவோம் ஒருவர் இருவரானோம். இப்போது மூவராகிறோம் என்று கூறிக்கொண்டே ஒரு தட்டு, இரண்டு தட்டு, மூன்று**

**என்று தேடித் தட்டுகளை வைக்கிறாள்”**[10] இதன் வழி வந்தவர்களை உபசரிக்கும் பண்பாட்டினைத் தெளிவாக விளக்குகிறார்” ஆசிரியர்.

மனிதமதிப்பிற்கு அடிப்படை சகமனிதனையும் நேசிப்பது ஆகும். தாழ்த்தப்பட்டவர்களையும் அரவணைப்பது நேசிக்கும் மனித மாண்புகளை ஆசிரியர் தம் புதினங்களில் நிலைப்பெற செய்து இருக்கிறார்.

**தியாகம்:**

இரண்டில் ஒன்றை இழப்பின் ஒன்றன் மதிப்பு உயர்வினைப் பெறும் என்பது மேலைநாட்டுப் பழமொழி. மனிதனின் மதிப்பினை உயர்வடையச் செய்வது தியாகம். தியாகத்தை வாழிவியல் நிலையில் நோக்கும் போது தனிமனிதனில் தொடங்கி குடும்பம் என்று படிப்படியாக வளர்ந்து சமூகம் என்ற நிலை வரை உயர்வடையும். அன்பின் அடிப்படையில் தியாகம் தோற்றம் பெறுகின்றன. **“தியாகம் என்பது தன்னிடம் அதிகம் உள்ள ஒன்றைப் பிறக்கும் கொடுப்பதன்று தன்னிடம் அரிதின் உள்ள ஒன்றை மற்றொருவரின் வாழ்விற்கு மனமுவந்து வழங்குவதாகும்.”.**[11]

இவரது, ‘**அலைவாய்க் கரையில்**’ என்ற நாவலும், ‘**உத்திரகாண்டம**’ என்னும் நாவலும் தியாகத்தின் பெருமையை உணர்த்துகின்றது.

உத்திரகாண்டம் என்னும் புதினத்தில் இடம் பெறும் மகாத்மா காந்தியின் சீடர் சமையல் பணியாளரை நோக்கி பின்வருமாறு கூறுகிறார்.

**“இல்லை தாயம்மா, எனக்கு இப்ப ஒண்ணு புரியுது, விடுதலைப் போராட்டத்தில் யாரும் எங்களைக் கட்டாயப்படுத்தி இழுத்துவிடல, ஆனால் காந்திமகானின் வாழ்க்கை, சத்திய சோதனை, அந்த காந்தி, அவர் பேச்சு, நடப்பு எங்களை அறியாமல், ஒரு தியாக வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்தது”**[12] என்று தியாகத்திற்கு வழிகாட்டிய அண்ணல் காந்தியடிகளின் தியாகம் இங்கு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**நாட்டுப்பற்று:**

சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையின் சாரமாகத் திகழ்வது நாட்டுப்பற்று ஆகும். இவரது, **உத்திரகாண்டம், கரிப்பு மணிகள், வேருக்கு நீர், பாதையில் பதிந்த அடிகள்** போன்ற நாவல்களின் வழி ஆசிரியர் நாட்டுப்பற்றை விளக்கியுள்ளார். உத்திரகாண்டம் என்னும் புதினத்தில் கேரளத்து இராமுண்ணி என்னும் பாத்திரத்தின் வாயிலாக,

**“பால்யத்தில் விவாகம் கழிச்சும் ரொம்பக் காலம் பார்வதியின் முகம் பாராமல் ஸ்பரிசம் இல்லாமல் இருந்ததும், அவங்களும் சத்யாகிரகம் பண்ணி ஜெயிலுக்குப் போனதும் எந்த ஒரு பாக்கியம்”**[13] நாட்டு விடுதலைக்காக மணந்து கொண்ட மனைவியிடம்கூட படுக்காமல் விரதம் இருத்தலும், நாட்டிற்காக சிறைக்கு செல்வதை பாக்கியமாகக் கருதுவதும் இவன் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் தேசப்பற்றை நினைவூட்டுகின்றன.

**அகிம்சை:**

அகிம்சை என்பதற்கு பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தல் என்று பொருள்படும். இவரது வளைக்கரம் என்னும் புதினம் கோவா விடுதலைப் போராட்டத்தை பின்னணியாகக் கொண்டது. காந்திய நெறியில் நடைபெறும் அகிம்சை வழிப் போராட்டமே இறுதியில் வெற்றி தரும் என்பதைக் கூறுகிறது.

**தொகுப்புரை:**

இராஜம் கிருஷ்ணனின் சமுதாயப் பொறுப்புணர்வோடு கூடிய இலக்கியப் பணியை அவர்தம் படைப்புகள் வழி காண முடிகிறது. எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணுவதால் இறத்தலும், இறவாமையும் நீங்கி அன்பால் சமத்துவம் உருவாகும் தன்மை, மனித வாழ்க்கை செழிப்பதற்கு அடிப்படை கல்வி, சமுதாயத்தின் ஆணிவேர் பண்பாடு, தியாகத்தின் மாண்புகள், நாட்டுப்பற்றின் பெருமை, அகிம்சையின் சிறப்பு, போன்ற மனித மாண்புகளையும் போற்றினால் நம்நாடு உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கும் என தம் புதினங்களின் வழி மெய்பித்துள்ளார் ஆசிரியர் இராஜம் கிருஷ்ணன.

**சான்றென் விளக்கம்**


1. இராஜம் கிருஷ்ணன், அலைவாய்க் கரையில் ப.223
2. திருமூலர், திருமந்திரமாலை, ப.45.
3. இராஜம் கிருஷ்ணன் மலர்கள், ப. 10
4. மேலது, ப. 578.
5. மேலது ப. 198.
6. இராஜம் கிருஷ்ணன் அலைவாய்க் கரையில் ப. 223.
7. இராஜம் கிருஷ்ணன் வேருக்கு நீர், ப. 110.

8. இராஜம் கிருஷ்ணன், சேற்றில் மனிதர்கள் ப – 238

9. இராஜம் கிருஷ்ணன், உத்திரகாண்டம் ப – 71

10. இராஜம் கிருஷ்ணன் கோபுரபொம்மைகள், ப. 86.

11. வைரமூர்த்தி, தமிழ்ச்சிறுகதைகளில் வாழ்வியல் மதிப்பும் மாற்றமும் ப – 11

12. இராஜம் கிருஷ்ணன், உத்திரகாண்டம், ப. 28.

13. இராஜம் கிருஷ்ணன், உத்திரகாண்டம் ப. 45.

**துணை நூற்பட்டியல்:**

1. இராஜம் கிருஷ்ணன், சேற்றில் மனிதர்கள், தாகம் பதிப்பகம் தி.நகர். சென்னை, முதல் பதிப்பு – 1982.

2. இராஜம் கிருஷ்ணன், கரிப்பு மணிகள், தாகம் பதிப்பகம், தி. நகர். சென்னை -17. மூன்றாம் பதிப்பு – 1987.

3. இராஜம் கிருஷ்ணன், வேருக்கு நீர், தாகம் பதிப்பம், தி.நகர், சென்னை, 4ஆம் பதிப்பு – 1989.

4. இராஜம் கிருஷ்ணன், உத்திரகாண்டம், தாகம் பதிப்பம், தி.நகர், சென்னை, முதல் பதிப்பு – 2001.

5. இராஜம் கிருஷ்ணன், அலைவாயக் கரையில், தாகம் பதிப்பம், தி.நகர், சென்னை – 17, முதல் பதிப்பு – 1989

6. இராஜம் கிருஷ்ணன், மலர்கள், தாகம் பதிப்பம், தி.நகர், சென்னை, 2 –ஆம் பதிப்பு – 1974.

7. திருமூலர், திருமந்திரமாலை, உமா பதிப்பம், தி.நகர், சென்னை – 01

.